பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 10 புதன்கிழமை 25.12.2024 | அதிர்வு 146

## துப்பாக்கிச்சூட்டில் கணவன் மரணம்; மனைவி படுகாயம்

குருநாகல் – வெல்லவ பகுதியில் தம்பதியினரை இலக்குவைத்து மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் கணவன் உயிரிழந்ததுடன், அவரது மனைவி 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தங்கள் சொந்தக் காணிகளையே விடுவிக்கக் கோருகின்றனர் மக்கள்

### தென்னிலங்கை சிவில் சமூகத்தினரிடம் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



“இராணுவத்தினரின் காணிகளை வடக்கு மக்கள் விடுவிக்கக் கோரவில்லை. அவர்களின் சொந்தக் காணிகளையே விடுவிக்கக் கோருகின்றார்கள் என்ற தெளிவுபடுத்தலை தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துச் சொல்லுமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்துள்ளேன்.”

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வயாவிளான், பலாலி தெற்கு, பலாலி கிழக்கு மக்களின் அழைப்பின் பேரில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடலும், பூனையன்காடு இந்து மயானத்தில் மர நடுகையும் இன்று புதன்கிழமை காலை வயாவியானில் நடைபெற்றது. 04

# யாழில் சாரதி, நடத்துனர் மீது கொலைவெறித் தாக்குதல்!

### சந்தேகநபர்கள் தப்பியோடியபோது வேடிக்கை பார்த்த பொலிஸார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் சாரதி மற்றும் நடத்துனர் மீது இனந்தெரியாத இருவர் தாக்குதல் நடத்திய நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று காரைநகர் இ.போ.ச. சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

காரைநகர் சாலையின் 786 வழித்தட பஸ் சேவை சாரதி யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று யாழ். பஸ் நிலையத்தில் பஸ்ஸைத் தரித்தார். தொடர்ந்து தேனீர் சாலைக்கு தனது பஸ் நடத்துனருடனும் யாழ். சாலை நடத்துனருடனும் அவர் சென்றார்.

அவ்வேளை திடீரென தேனீர்சாலைக்குள் வந்த இருவர் சாரதியின் தலையில் போத்தலால் அடித்தனர். யாழ். சாலை நடத்துனர் தாக்குதலைத் தடுக்க முற்பட்ட போது அவரைக் கத்தியால் வெட்டுவதற்கு மேற்படி இருவரும் கலைத்துச் சென்ற நிலையில் அவரது கையில் காயம் ஏற்பட்டது. தொடர்ந்து பொலிஸாரைக் கண்டவுடன் இருவரும் தப்பித்துச் சென்றனர். 03





# வவுனியா சிறையிலிருந்து எட்டு கைதிகள் விடுதலை!

(கி.வசந்தன்)

வவுனியா விளக்கமறியல் சிறைச் சாலையில் இருந்து 8 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இன்று நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் சிறு குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றிருந்த 389 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்படுகின்றனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

அந்தவகையில் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் சிறுகுற்றங்களுக்காக தடுத்துவைக்கப்பட்டிருந்த 8 பேர் விடுவிக்கப்பட்டனர்.

வவுனியா விளக்கமறியல் சிறைச் சாலையின் பொறுப்பதிகாரி புத்திக பெரெரா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



# யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் கிறிஸ்மஸ் ஆராதனை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையிலான கிறிஸ்மஸ் ஆராதனைகள் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நேற்று நள்ளிரவு இடம்பெற்றது.

இயேசு பாலனின் பிறப்பைக் கொண்டாடும் கத்தோலிக்க மக்கள் பெருமளவில் வந்து ஆராதனை நிகழ்வுகளில் பங்குகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட 51 இராணுவத் தலைமையகம் மற்றும் யாழ். மறை மாவட்ட ஆயர் இல்லம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நத்தார் கரோல் நிகழ்வுகள் இடம்பெற்றன.



ஆராதனை நிகழ்வில் யாழ். மறை மாவட்ட ஆஜர் அதி வணக்கத்துக்குரிய ஜஸ்ரின் ஞானபிரகாசம் ஆண்டகை, யாழ். மாவட்ட குரு முதல்வர், யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன், வடக்கு மாகாண பிரதமர் செயலாளர் எல்.இளங்கோவன், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மானத ஜகம்பத், 513 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் பிரசாந்த ஏக்கநாயக்க மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# யாழில் மார்கழிப் பெருவிழா

**(எஸ்.நிதர்ஷன்)**

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடத்தும் மார்கழிப் பெருவிழா இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதனையொட்டி வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் வழிபாட்டைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் வரை யானைகள் மீது திருமுறைகள் நகர்வலம் கொண்டுவரப் பட்டன.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், பழனி ஆதீன குருமகா சந்நிதானம் சாது சண்முக அடிகளார், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, தென்னாடு முதல்வர் குணரத்தினம் பார்த்தீபன், சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தில் அம்பலவாணர் அருள் வழிபாடு நடைபெற்று கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.









## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**யாழில் சாரதி...**

உடனடியாகக் காயமைடந்த சாரதியும், நடத்துனரும் ஏனைய சாரதிகள், நடத்துனர்களின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர்.

தாக்குதலாளிகள் தப்பியோடிய போது அவர்களைப் பொலிஸார் கைது செய்யாது பார்த்துக் கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சிறிது நேரம் பஸ் சேவை இடம்பெறாமல் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டபோதும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர்களைக் கைது செய்வதாக வழங்கிய உத்தரவுக்கமைய சேவைகள் இடம்பெறுகின்றன என்று காரைநகர் இ.போ.ச. சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

---

**துப்பாக்கிச்சூட்டில்...**

காயமடைந்துள்ளார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று இரவு இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட நிலையில், குறித்த சம்பவத்தில் அவ்வீட்டிலிருந்த தம்பதியினர் படுகாயமடைந்தனர்.

அவர்கள் சிகிச்சைக்காக குருநாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளையில் 32 வயதுடைய கணவர் உயிரிழந்தார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த மனைவி தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் வெல்லவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தங்கள் சொந்த...**

அந்தப் பிரதேச மக்கள் சார்பில் கருத்துத் தெரிவித்த உ.சந்திரகுமாரன், "வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் இந்த மண்ணை நேசிக்கும் ஒருவர். நாம் தற்போது எடுத்தோம் கவிழ்த்தோம் எனச் செயற்பட முடியாது. கட்டம் கட்டமாக எமது காணிகளை விடுவிக்க ஆளுநர் நடவடிக்கை எடுப்பார் என நாம் முழுமையாக நம்புகின்றோம். பலாலி வீதியில் வசாவிளான் சந்தி வரையான வீதி விடுவிக்கப்படும் என நாம் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால், இந்த அரசின் காலத்தில் ஆளுநரின் கோரிக்கையால் அது நடைபெற்றது. அதேபோன்று ஏனைய இடங்களும் நாம் எதிர்பாராத நேரத்தில் விடுவிக்கப்படும் என நம்புவோம். அரசியல் கலப்பற்று ஒற்றுமையாக இது நடைபெறவேண்டும். அதைவிட எமது விடுவிக்கப்பட்ட பகுதிகளில் எம் முன்னோர்கள் நினைவாக மரங்களை நட்டு பசுமைத் தேசமாக மாற்றுவோம்." – என்றார்.

இதன் பின்னர் உரையாற்றிய வடக்கு ஆளுநர்,

"2015ஆம் ஆண்டு காலத்தில் யாழ். மாவட்ட செயலராக நான் இருந்தபோது படிப்படியாக பல பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் குடியமரவில்லை எனப் பாதுகாப்புத் தரப்பினர் எங்களுக்கு திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் வீட்டுத் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தினோம். மக்களும் எதிர்பார்த்ததைப்போன்று மீள் குடியமர்ந்தார்கள். 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தைத் தொடர்ந்து காணி விடுவிப்புக்கள் நடைபெறவில்லை.

இந்த ஆண்டு சிறிய அளவில் காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. விடுவிக்கப்பட்ட காணிகளை விவசாயபூமியாக மாற்றுவதுதான் நீங்கள் எங்களுக்கு செய்யும் உதவி.

இடம்பெயர்ந்தவர்களின் வலி எனக்கும் தெரியும். நானும் இடம்பெயர்ந்த ஒருவன்தான். தற்போது யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள யஹம்பத் நேர் சிந்தனையுடைய ஒருவர். எனவே, இந்த அரசின் காலத்தில் படிப்படியாக காணிகளை விடுவிக்க முடியும் என நம்புகின்றோம்.

இங்கு காணிகள், வீதிகள் விடுவிக்கப்பட்டதும் தென்னிலங்கையிலிருந்து சில தேவையற்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. தென்னிலங்கை மக்களுக்கு இங்கு நடைபெறுவது என்ன என்ற உண்மையைத் தெளிவுபடுத்துமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையை சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்திருக்கின்றேன். வடக்கு மக்கள் எல்லோருக்கும் எதிர்பார்ப்பு இருக்கின்றது என்பது எனக்குத் தெரியும். விரைவில் சாதகமான விடயங்கள் நடக்கும் என நம்புகின்றேன்." – என்றார்.

இதன் பின்னர் அந்தப் பிரதேசத்தில் வடக்கு ஆளுநரால் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலர், தெல்லிப்பழை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வை வயாவிளான் மீள் எழுச்சிக்கான உதவும்கரங்கள் மற்றும் பூனையன்காடு இந்து மயான அபிவிருத்திச் சபை என்பன ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.













# தேசிய ஆக்கத்திறன் போட்டியில் வென்ற அறநெறி பாடசாலை மாணவர் கௌரவிப்பு

**(வி.ரி. சகாதேவராஜா, நூருல் ஹுதா உமர்)**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அறநெறி பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிக்கொணரும் வகையில் நடத்தப்படும் தேசிய ஆக்கத்திறன் போட்டியில் பங்கு பற்றி தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழவு கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக பிரிவில் பங்கு பற்றி வெற்றிப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை பெற்றுக் கொண்ட அறநெறி பாடசாலை மாணவர்கள் பிரதேச செயலாளரால் திங்கட்கிழமை (23) கௌரவிக்கப் பட்டனர்.

தேசிய மட்டத்தில் குழு நிகழ்வில் (நாடகம்) இரண்டாம் இடம் பெற்ற முருகன் ஐக்கிய சங்க அறநெறிப் பாடசாலை மாணவர்களான கே.வர்ஷா, எஸ். மதுராந்தகி, எஸ்.தேஜன்யா, டீ.மதுசாயினி, எஸ்.கம்ஷிகா, எஸ். லேனுஷா, எஸ்.லேக்சா, ஏ.கனிஷ்கா, எஸ்.டோஜிகா, பீ.குகதீஸ், ரீ.தினோஸ்காந், என்.தர்சிகா,என். யோஜனா ஆகியோரும் கட்டுரை போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட கண்ணகி அறநெறிப் பாடசாலை மாணவி ச.யகாத்மிகா, சித்திரம் போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட இந்து கலாசார ஒன்றிய அறநெறிப் பாடசாலை மாணவர் வீ.பிருஷாந், பேச்சாற்றல் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்ட இந்து சமய விருத்தி சங்க அறநெறிப் பாடசாலை மாணவி இ. ஜோதிர்மயி, கதாப்பிரசங்கம் போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்ட இந்து கலாசார ஒன்றிய அறநெறிப்பாடசாலை மாணவி ஜ.சதுஷிகா ஆகியோரே கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வுகள் அனைத்தும் காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணனின் வழிகாட்டலில் மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி, பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எல். சிவலோஜினி ஆகியோரின் ஒருங்கிணைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.




# பெருந்தோட்டப் பிரதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சிவப்பிரகாசம்

**(வி.ரி. சகாதேவராஜா)**

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் பிரதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளரும் ஆலோசகருமாக கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமை ஆய்வாளரும் சிறந்த கல்விமானும் தேசிய மக்கள் சக்தியின் மலையக தேசிய குழு உறுப்பினருமான கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம் நாடளாவிய ரீதியில் அளப்பெரிய சேவையாற்றிவரும் மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் ஸ்தாபகராவார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் எஸ். பிரதீப் கலாநிதி சிவப்பிரகாசத்துக்கான நியமன பத்திரத்தை நேற்று முன்தினம் பணிமனையில் வைத்து வழங்கினார்.

இவர் தேசிய மக்கள் சக்தியின் மலையக மக்கள் சம்மந்தமான கொள்கைத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் என்பவற்றை உருவாக்குவதில் மிக முக்கிய பங்கு வகித்தவர்.



அத்துடன் மலையக மக்களின் மாற்றத்துக்காக மிகுந்த பங்களிப்புச் செய்தவர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சட்டத்தின் ஆட்சி அவசியம்

கடந்த 46 வருடங்களாக இந்த நாட்டில் நடைமுறையில் இருக்கும் காட்டுமிராண்டித்தனமான - மிலேச்சத்தனமான - கொடூரமான - குரூரமான - பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்பது தற்போது ஜனாதிபதியின் அதிகாரத்தையும், நாடாளுமன்ற அதிகாரத்தையும் கைப்பற்றி இருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும், குற்ற விவகாரங்கள் தொடர்பான பிற சட்டங்கள், விடயங்கள் இந்த அரசில் அமைச்சரவை ஒப்புதலுடன் முன் நகர்கின்றன. ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கைவாங்கும் நடவடிக்கையில் எந்த முன்நகர்வும் இல்லை.

மறுபுறத்தில் அந்தச் சட்டத்தை ஒரு சில திருத்தங்களுடன் நடைமுறையாக்கம் செய்வது பற்றி பிரஸ்தாபிக்கப்படுவதோடு, அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி கைதுகளும் தடுப்புக் காவல் நடவடிக்கைகளும் புதிய அரசின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றன.

1978 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடைச் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்) நீக்கப்படுவதை ஒரு சிறிய சட்ட மூலத்தை நிறைவேற்றுவதன் வாயிலாகச் செய்ய முடியும்.

இந்தச் சட்டத்தை நீக்குவதனால் அரசில் கட்டமைப்பு ரீதியான சிக்கல்கள் ஏதும் வந்து விடாது. ஆயினும், அந்தச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்கள், சிறையில் இருப்பவர்கள், விசாரணைகளை எதிர்கொள்பவர்கள் தொடர்பில் என்ன செய்வது என்ற ஒரு குழப்பம் இருக்கலாம். ஆனால், அதற்கும் முன் உதாரணமான தீர்வு உண்டு.

எழுபதுகளின் ஆரம்பத்தில் ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜே.வி.பியினரைத் தண்டிப்பதற்காக கொண்டுவரப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க குற்றவியல் நீதி ஆணைக்குழுச் சட்டம் 1977 இல் அதிகாரத்துக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசால் இரத்துச் செய்யப்பட்டபோது, இன்றைய ஜனாதிபதியின் அரசியல் கட்சியான ஜே.வி.பியின் ஸ்தாபகர் றோஹண விஜயவீர உட்பட அந்தச் சட்டத்தின் கீழ் அநீதியான முறையில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அனைவரும் விடுவிக்கப்பட்டார்கள்.

அதனையே இப்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் விடயத்திலும் அந்த றோஹண விஜயவீரவின் வழியில் வந்த தற்போதைய ஜனாதிபதியும் முன்னெடுக்க வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

1972 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க குற்றவியல் நீதி ஆணைக்குழு சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜே.வி.பியினர் 1977 இல் மன்னித்து விடுவிக்கப்பட்ட பின்னர் மீண்டும் எண்பதுகளின் கடைசி பகுதியில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை முன்னெடுத்த நிலையில், 1988 - 89 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இதே ஜனாதிபதியின் தோழர்களுக்கு எதிராக அடிக்கடி பிரயோகிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் அதே கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாக இருந்து கொண்டு பயன்படுத்துவது என்பது மனசாட்சி உள்ள ஒரு மனிதருக்கு இனிமையான பணியாக இருக்க முடியாது. ஆயினும், அது நமது நாட்டில் தொடர்கின்றது.

நினைத்த நேரத்தில், நினைத்த நபர்களை, எந்தவித ஆதாரங்களும் இன்றிக் கூட தடுப்புக் காவலில் தடுத்து வைத்து, இம்சைப்படுத்தி, விரும்பிய வாக்குமூலங்களைப் பெற வசதியாக இருக்கும் இந்தக் காட்டுமிராண்டிச் சட்டத்தை அரசு கைவிடுவதற்கு, இதுவரை அந்தச் சட்டத்தை அதிகம் பயன்படுத்தி, பழக்கப்படுத்திக் கொண்ட பாதுகாப்பு அதிகாரிகளிடமிருந்து கடுமையான எதிர்ப்பை - ஆட்சேபத்தை - அரசு எதிர்கொள்ளக் கூடும்.

அதுவே, 'அடக்குமுறைச் சட்டம்' என்று தாங்களே குத்திக்காட்டி விமர்சித்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இந்த ஆட்சிப்பீடம் நீக்க முடியாமல் தடுமாறுவதற்கும் அந்தச் சட்டத்தை தொடர்வதற்கும் காரணமாக இருக்க முடியும் என்பது அவதானிகளின் கருத்தாக உள்ளது.

சர்வ அதிகாரங்களையும் தனி நபரிடம் ஒப்படைக்கும் இத்தகைய மனித உரிமை மீறல் சட்டங்களை நாட்டிலிருந்து அடியோடு ஒழித்தால் மட்டுமே இந்த நாட்டில் மனிதத்துவமும் நீதியான சட்டத்தின் ஆட்சியும் ஒழுங்கு முறையும் நிலை பெற முடியும்.



# நோர்வூட் சென் ஜோன்டிலரி தோட்ட மலையில் 2 சிறுத்தைக் குட்டிகள் மீட்பு!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நோர்வூட் சென் ஜோன்டிலரி மேல் பிரிவு தேயிலைத் தோட்ட மலையின் அடிவாரத்தில் இருந்து இரண்டு சிறுத்தைக் குட்டிகள் மீட்கப்பட்டன என்று நல்லதண்ணி

நேற்று செவ்வாய்க்கிழமை காலை இவை மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தேயிலை மலையில் ஆண் தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருந்த போது தேயிலை மலையின் அடிவாரத்தில் இரண்டு குட்டிகள் இருப்பதை கண்டு தோட்ட நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளனர். இந்த இரண்டு குட்டிகள் தொடர்பாக நோர்வூட் பொலிஸார் வனவிலங்கு அதிகாரிகளுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இந்த இரண்டு குட்டிகளும் சிறுத்தையின் குட்டிகள் என உறுதி செய்யப்பட்டன.

இரண்டு குட்டிகளையும் நேற்று முன்தினம் இரவு தாய் சிறுத்தை ஈண்டெடுத்திருக்கலாம் என்று வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு சிறுத்தைக் குட்டிகளையும் அதே இடத்தில் வைக்குமாறு வனவிலங்கு அதிகாரிகள் குறித்த தேயிலை மலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தெரிவித்துள்ளனர்.

இரண்டு குட்டிகளும் காணப்பட்ட பகுதியில் பாரிய சிறுத்தை புலி ஒன்று அலைந்து திரிவதாகவும் அந்த பகுதிக்கு சென்று தொழில் புரிய முடியாத சூழ்நிலை காணப்படுவதாக தொழிலாளர்கள் சுட்டி காட்டுகின்றனர்.

எனவே இது தொடர்பாக நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சென் ஜோன்டிலரி மேல்பிரிவுத் தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வு தம்பலாமம் பிரதேச செயலர் பிரிவில்

(ஹஸ்பர் ஏ.எச்.)

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு தம்பலாமம் பிரதேச செயலகப் பகுதியில் மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வுகள் நேற்று (24) இடம்பெற்றன.

இந்தத் தினத்தைத் தம்பலகமம் பிரதேச செயலகம் மற்றும் மருதம் மாற்றுத் திறனாளிகள் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி வழிகாட்டுதலுக்கு இணங்க இந்த நிகழ்வானது தம்பலகமம் சாரதா தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.


இந்த முறை “உள்ளடங்கிய மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக மாற்றுத் திறனாளிகளின் தலைமைத்துவத்தை



மேம்படுத்தல்” எனும் தொனிப்பொருளின் கீழ் கொண்டாடப்பட்டது.

இதன் போது குறித்த பாடசாலையில் விசேட கல்வி பிரிவில் கற்கும் மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. மருதம் மாற்றுத் திறனாளிகளின் சங்க உறுப்பினர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன. இதில் பரிசளிப்பு வைபவமும் இடம் பெற்றது.

நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், மாவட்ட செயலக சமூக சேவைகள்திணைக்கள இணைப்பாளர் த.பிரணவன், திருகோணமலை வலயக் கல்வி அலுவலக விசேட கல்வி பிரிவு உதவி கல்வி பணிப்பாளர் அகிலன், தம்பலகாமம் கோட்ட கல்வி பணிப்பாளர், கப்பல்துறை ஆயுள்வேத தளவைத்தியசாலை வைத்தியர் மல்சா ஜயரட்ண, சமூக சேவைகள் உத்தியோகத்தர், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர், சாரதா வித்தியாலய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மருதம் மாற்றுத் திறனாளிகள், சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

# உலக நல்லிணக்கத்துக்கான திருநாளாக நத்தார் அமையட்டும்

## வாழ்த்துச் செய்தியில் பிரதமர் சுட்டிக்காட்டு

“நத்தார் பண்டிகை தவறுகளை மன்னிக்கவும் சமரசம் செய்யவும் நினைவூட்டுகிறது. ஆகவே, எமது குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் பரந்த உலகுக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக இந்த நத்தார் தினம் அமையட்டும்.”

– இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–

“இந்த மகிழ்ச்சியான பருவத்தைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில், கிறிஸ்மஸ் ஒற்றுமை, நன்றியுணர்வு மற்றும் அமைதி ஆகியவற்றின் உண்மையான சாராம்சத்தைப் பற்றி சிந்திக்க சிறிது நேரம் ஒதுக்குவோம். எமது தேசத்துக்கான மாற்றம் மற்றும் மீளமைப்பதற்கான இந்த நேரத்தில், குடும்பம் மற்றும் நண்பர்களுடன் பெறுமதிமிக்க நேரத்தை செலவிடுவதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. ஒன்றுகூடுவதும் உணவைப் பகிர்ந்து கொள்வதும் ஒருவரையொருவர் ஆதரிப்பதும் எமது பந்தங்களை மட்டுமல்ல, நம்



நெகிழ்ச்சியையும் பலப்படுத்துகின்றது.

ஆரோக்கியமான சமூகத்தையும் வலிமையான நாட்டையும் கட்டியெழுப்புவது வீட்டிலிருந்து தொடங்குகிறது என்பதை இந்தத் தருணங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன.

இந்தப் பண்டிகைக் காலத்தில் தங்கள் அன்புக்குரியவர்களுடன் இருக்க முடியாதவர்களையும் நாங்கள் அங்கீகரிக்கின்றோம். நம் நாட்டுக்குள்ளும் வெளிநாட்டிலும் வீட்டிலிருந்து வெகு தொலைவில் பணிபுரிபவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களை ஆதரிப்பதற்காகவும் எங்கள் சமூகத்தை நிலைநிறுத்தும் அத்தியாவசிய சேவை ஊழியர்களுக்கும் நன்றி.

நாம் பண்டிகையைக் கொண்டாடும் வேளையில், குழந்தைகள் உட்பட எண்ணற்ற பொதுமக்கள் கொல்லப்படும் தொடர்ச்சியான மோதல்களால் குழப்பமடைந்த உலகில் அமைதிக்கான நம்பிக்கையை நம் இதயங்களில் சுமந்து செல்வோம்.

நத்தார் பண்டிகை நம்மை பிரதிபலிக்கவும் மன்னிக்கவும் சமரசம் செய்யவும் நினைவூட்டுகின்றது என்பதுடன் எமது குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் பரந்த உலகுக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக அமையட்டும். எமது மகிழ்ச்சியுடன் பாதுகாப்புக்கும் முன்னுரிமை கொடுப்போம்.

விழிப்புடன் இருப்பதன் மூலமும் பொறுப்பான தெரிவுகளைச் செய்வதன் மூலமும் நம்மையும் மற்றவர்களையும் பாதுகாத்துக்கொள்வோம்.

தொடர்புகளை வளர்த்துக்கொள்ளவும் பின்னடைவை உருவாக்கவும் ஒற்றுமை மற்றும் புரிதலுக்கு உறுதியளிக்கவும் இந்தப் பண்டிகை நம்மை ஊக்குவிக்கட்டும். உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!”
– என்றுள்ளது.






# சிவனொளி பாத மலைக்குச் செல்லும் மக்கள் இலவச குடிதண்ணீர் பெறுவதற்குத் திட்டம்

(மஸ்கெலியா நிருபர்)

சிவனொளி பாத மலை பருவ காலத்தில் இலவசமாக சுத்தமான குடி தண்ணீர் யாத்திரியர்களுக்கு வழங்கும் திட்டம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல வர்த்தகருமான திலிப் ஜயவர்தன மற்றும் சிவனொளி பாத மலைக்கு பொறுப்பான தேரர் பெங்கமுவே தம்ம தின்ன ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பல ஆண்டுகளாக சிவனொளி பாத மலைக்குத் தரிசனம் செய்ய வரும் அனைத்து பக்தர்களுக்கும் சுத்தமான குடி தண்ணீரைப் பணம் இன்றி பெற்றுக் கொள்ளவும் பிளாஸ்டிக் பாவனையில் இருந்து விடுபடவும் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் இந்த வேலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வேலை திட்டத்தை தர்ம சுகந்த மனுசத் பதனம என்ற நிறுவனத்தின் தலைவர் சுஜித் விக்கிரம ரத்ன சிவனொளி பாத மலைக்கு வரும் யாத்திரிகர்கள் நலன் கருதி மிகவும் அர்ப்பணிப்புடன் ஆரம்பித்து வைத்தார்.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் சிவனொளி பாத மலை அடி வாரமான சியதகங்குல பகுதியில் இருந்து மலை உச்சி வரை குடி தண்ணீரைப் பெற்றுக்கொள்ள வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சிவனொளி பாத மலைக்கு எதிர்வரும் காலங்களில் பிளாஸ்டிக் போத்தல்கள் தடுக்க முடியும் எனவும் சுற்றுச்சூழலை காப்பாற்ற முடியும் என்றும் சுற்றுச்சூழல் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# கிண்ணியா ஆலங்கேணியில் யானை தாக்கி வீட்டுக்கு சேதம்

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆலங்கேணி பகுதியில் ஊருக்குள் நுழைந்த காட்டு யானை தாக்கியதில் வீட்டுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என்று வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இரவு நேரத்தில் தனது பிள்ளையுடன் தூங்கி கொண்டிருக்கும் போது குறித்த யானை தாக்குதல் இடம்பெற்றது என்றும் தெரிவித்தார்.

இதனால் வீடு மற்றும் உடைமைகள் சேதமாக்கப்பட்டன என்றும் தாம் மயிரிழையில் உயிர் தப்பினர் எனவும் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் அடிக்கடி யானைத் தொல்லை ஏற்படுவதால் அந்தப் பிரதேச மக்கள் நிம்மதியாக தூங்க முடியாது தவிர்க்கின்றனர்.

பாதுகாப்பான யானை வேலி இன்மையால் யானை தொல்லையில் இருந்து பாதுகாக்குமாறும் உரிய அதிகாரிகளிடம் இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சம்மாந்துறையில் அரச ஒசுசல மற்றும் பஸ் டிப்போ நிறுவுவதற்காக அஷ்ரப் தாஹிர் எம்.பி. நடவடிக்கை

**(நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்)**





சம்மாந்துறை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று (24) ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது சம்மாந்துறை பிரதேசத்திற்கான அரச ஒசுசல ஒன்றை நிறுவுதல், கல்முனை பஸ் டிப்போ உடன் சம்மாந்துறை பஸ் டிப்போவை மீண்டும் சம்மாந்துறையில் நிறுவுதல் போன்ற விடயங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிரால் முன்மொழியப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சம்மாந்துறை பிரதேச நீர்பாசன பிரச்சினைகள், சம்மாந்துறை வைத்திய சாலை காணி விவகாரம், ஜமாலியா பாடசாலை மாற்று காணி விடயம், மாவடிப்பள்ளியில் உடனடியாக பாலம் அமைப்பது சம்பந்தமான தீர்மானம், விவசாய காணி சம்பந்தமான பிரச்சினைகள், நீர்ப்பாசன பிரச்சினைகளுக்கான தீர்வுகள், போன்றவை கலந்தாலோசிக்கப்பட்டு முடிவுகளும் எடுக்கப்பட்டன.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா வின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.எம் அஷ்ரப் தாஹிர், ஏ.எம்.மஞ்சுல ரத்நாயக்க, எம்.எஸ் உதுமாலெப்பை, கே.கோடீஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம் நிசாம் காரியப்பர், அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம, மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் ஏ.எம் சாஹிர், பிரதம கணக்காளர், ஏ.எல் மஹ்ரூப், உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் பிரதேச செயலகத்தின், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிவாரண உதவி திங்களன்று வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணம், தொண்டைமானாறு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் பெரும் தொகையில் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் இந்த உதவிகளை வழங்கி வருகின்றார்.

இந்த வகையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சண்டிலிப்பாய் மத்தி பிரதேசத்தில் ஜே – 142 கிராம சேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 48 குடும்பங்களுக்கு, 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசிய உணவுப் பொருள்கள் சண்டிலிப்பாய் மத்தி இளங்கதிர் சனசமூக நிலையத்தில் வைத்துத் தலைவர் ச.கனகரத்தினம் தலைமையில் வைத்து வழங்கப்பட்டது.

அத்துடன் நல்லூர் பிரதேச செயலகத்தில் கீழ் உள்ள சங்கிலியன் தோப்பு, ஜே – 109 கிராம சேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 22 குடும்பங்களுக்கு, ஒரு லட்சத்துப் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசிய உணவுப் பொருள்கள் செல்லர் வீதியில் அமைந்துள்ள ஶ்ரீ ஜமுனாம்பிகா சமேத சிவ சங்கரனார் திருக்கோவிலில் (பூதவராஜர்) வைத்து வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இவற்றை வழங்கி வைத்தார்.













# சாவகச்சேரியில் வீடு ஒன்றில் பகலில் நகை, பணம் திருட்டு

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அரசடி, ஆசிரியர் வீதிப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பகல் வேளையில் துணிகர திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது வீட்டில் இருந்த 8 பவுண் நகைகள், 200 கனேடியன் டொலர் மற்றும் 35 ஆயிரம் ரூபா இலங்கைப் பணம் ஆகியன திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

திங்கட்கிழமை பகல் வேளையில் அரச உத்தியோகத்தரான மகன் கடமைக்குச் சென்றிருந்த நிலையில் வயோதிபத் தாயார் மாத்திரம் வீட்டில் இருந்துள்ளார்.

இதனைச் சாதகமாக பயன்படுத்திய திருடர்கள் வயோதிப தாய் குளியலறைக்குச் சென்ற நிலையில் திறந்திருந்த வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த அலுமாரி, கைப் பை ஆகியவற்றில் காணப்பட்ட நகை மற்றும் பணங்களை திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# திருமலையில் பொது மக்களின் காணிகளை அவர்களுக்கே பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

## அமைச்சர் அருண் ஹேமச்சந்ர தெரிவிப்பு

(எஸ்.கீதபொன்கலன், ஹஸ்பர் ஏ.எச்.)

பொது மக்களின் காணிகள் அவர்களுக்கே உரித்தானது. அதனை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு அரசு என்ற வகையில் வழங்க வேண்டிய அனைத்து உதவிகளையும் வழங்கவே நாம் உழைக்கின்றோம்.

நாடு பூராகவும் உள்ள அரச காணிகள் தொடர்பில், அவற்றை பயன்படுத்துவது தொடர்பில் இருக்கக் கூடிய அனைத்து தடைகளையும் நீக்கி திருகோணமலை உட்பட அனைத்து பகுதிகளிலும் ஒரு சீரான காணி வழங்கல் நடைமுறையை ஏற்படுத்த உள்ளோம்.

இவ்வாறு நேற்று (24) நடைபெற்ற திருகோணமலை மாவட்ட முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்ர கூறினார்.



தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியை பொறுப்பேற்ற பின்னரான திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் முதலாவது கூட்டம் நேற்று (24) மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் வெளிநாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்ர தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்தணசேகர, ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அக்மீமன ரொஷான் பிரிய சஞ்ஞன, ஐக்கிய மக்கள் சக்திப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.ரத்னாயக்க மற்றும் அனைத்து மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களதும் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்புத் தரப்பினர், பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதே வேளை 5 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக ஊடக செய்தியாளர்களும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றி செய்திகளை சேகரிக்க அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.



# அனர்த்த முன்னாயத்தங்களை மேற்கொள்ளல் கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

அனர்த்த முன்னாயத்தங்களை மேற்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன் தலைமையில் திங்கட்கிழமை கிழமை காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



இந்த இக்கலந்துரையாடலில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் ஏ.சி.எம்.றியாஸால் அனர்த்த முன்னாயத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் அனர்த்த முகாமைத்துவ குழுக்களை திறமையாக செயல்பட வைத்தல் போன்ற அனர்த்த ஆபத்துக்களை குறைத்தல் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் காரைதீவு உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், உதவி திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி பிரிவு தலைமை பீட முகாமையாளர் ஏ.எம்.அச்சு முஹமட், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதாரஅபிவிருத்திஉத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது; பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்பு!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

காசல்ரீ நீர் தேக்கத்துக்கு நீர் ஏந்திச் செல்லும் நோர்வூட் கேசல்கமுவ ஒயாவில் சட்ட விரோத மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்டு வந்த மூவரை நோர்வூட் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

நோர்வூட் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவலைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்ட விரோத மாணிக்ககல் அகழ்வுக்குப் பயன் படுத்தப்பட்ட நீர் இறைக்கும் மோட்டர் மற்றும் எனைய உபகரணங்களையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கம்பளை, பொகவந்தலாவ, எம்பிலிபிட்டிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரனைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# பாலமுனை பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

பாலமுனை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக கலந்துரை யாடுவதற்காக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸ டீன் அந்த வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இந்த வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக வைத்தியசாலை அபிவிருத் திக் குழுவினருக்கும் பிராந்திய பணிப் பாளருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறைந்த வளங்களுடன் பெரும் பணிகளை மேற்கொண்டு பிராந் தியத்தில் முதல் நிலை பெற்றுள்ள பாலமுனை வைத்தியசாலையின் சேவைகளை பாராட்டி பேசிய பணிப் பாளர் அங்குள்ள வைத்தியர்கள், சுகா தார உத்தியோகத்தர்கள் ஊழியர்க ளுக்கும் நன்றி தெரிவித்தார். வைத்தி யசாலையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரால் முன்வைக் கப்பட்ட கோரிக்கைகளை கேட்டறிந்து கொண்ட பணிப்பாளர் அதில் முடியுமா னவற்றை விரைவில் நிவர்த்தி செய்து தருவார் என்றும் உறுதியளித் தார். அத்துடன் வைத்தியசாலை யின் சில பிரிவுகளுக்கும் சென்று அங் குள்ள நிலைமைகளைப் பார்வையிட் டார்.

நிகழ்வுகளில் பிராந்திய கண்கா ணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பாலமுனை வைத்தி யசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.ஹரிஷ் ஆகி யோர் கலந்துகொண்டனர்.



# அனைத்துலகத் தமிழர் பேரவை நுளம்பு வலைகளை வழங்கியது

(வி.ரி. சகாதேவராஜா)

அனைத்துலகத் தமிழர் பேரவை காரைதீவில் வெள்ளப் பாதிப்புக்கு உள் ளான மக்களுக்கு நுளம்பு வலைகளை விநியோகம் செய்துள்ளது.

இந்த நிகழ்வு நேற்று (24) செவ் வாய்க்கிழமை காரைதீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஜி. அருணன் தலைமையில் நடைபெற்றது.

அனைத்துலகத் தமிழர் பேரவையின் நிதிப் பங்களிப்புடன் உலகத் தமிழ் மாணவர் ஒன்றியம் மற்றும் வருத்தப் படாத வாலிபர் சங்கம், இளவாலை, விருட்சம் உதவும் உள்ளங்கள் அமைப் பினரால் வழங்கி வைக்கப்பட்டது.









# சப்ரகமுவ பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கல்

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )**

சபரகமுவ மாகாணத்தில் தற்போது நிலவி வரும் ஆசிரியர்கள் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் முகமாக ஆசிரியர் சேவைக்குப் புதிதாகப் பட்ட தாரிகளை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு நேற்று முன்தினம் மாகாண கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பட்டதாரி ஆசிரியர்களுக்கான நிய மன கடிதங்கள் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், சப்ரக முவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்தன, நாடாளுமன்ற உறுப்பின ரும் இரத்தினபுரி மாவட்ட ஒருங்கி ணைப்பு தலைவருமான சாந்த பத்ம குமார, சுனில் ராஜபக்ஷ ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டன.












# இராணுவ வாகனம் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது 5 வீரர்கள் உயிரிழப்பு

ஜம்மு - காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் நேற்று மாலை இராணுவ வீரர்களை ஏற்றிச் சென்று வாகனம் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 5 வீரர்கள் உயிரிழந்தனர்.

மேற்படி வாகனம் 350 அடி பள்ளத் தாக்கில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

வாகனத்தில் 18 வீரர்கள் இருந்தனர் எனவும் அதில் 5 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனையவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலி ஸார் முன்னெடுத்துள்ளனர்.





# நீலக்கொடி கடற்கரை திட்டத்தை எதிர்த்து மீனவர்கள் மெரினாவில் போராட்டம்

நீலக்கொடி கடற்கரை திட்டத்தை எதிர்த்து மெரினா லூப் சாலையில் பொதுமக்கள், மீனவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டென்மார்க் நாட்டின் சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை, உலகம் முழுவதும் கடற்கரைகளை ஆய்வு செய்து அதற்கு நீலக்கொடி கடற்கரை தகுதியை வழங்கி வருகிறது. இந்தச் சான்றிதழானது, தூய்மை, பாதுகாப்பு மற்றும் கடற்கரையின் நிலைமை உள்ளிட்ட சர்வதேச தரங்களைப் பூர்த்தி செய்யும் கடற்கரைகளுக்கு மட்டுமே வழங்கப்படும்.

அந்த வகையில், இந்தியாவில் 8 கடற்கரைகளுக்கு நீலக்கொடி சான்றிதழ் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஏற்கெனவே செங்கல்பட்டில் உள்ள கோவளம் கடற்கரைக்கு நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை மெரினா கடற்கரைக்கும் நீலக்கொடி அந்தஸ்து பெறுவதற்காக, மெரினா கடற்கரையில் கட்டுமானங்களை மேற்கொள்ள சென்னை மாநகராட்சி விலைமனு கோரியுள்ளது. நீலக்கொடி கடற்கரைகள் திட்டப்படி, கடற்கரையை சுற்றியுள்ள பகுதிகள் பொதுமக்கள் எளிதில் அணுகும் வகையிலும் பாதுகாப்புடனும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையிலும் அமைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், கடற்கரையில் நடைபாதை, மிதிவண்டி தடங்கள், விளையாட்டு பகுதி, படகுத் துறை, கண்காணிப்பு கோபுரம், பாரம்பரியத் தாவரங்கள் குறித்த ஆய்வு போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த பணிகள் முடிந்த பின்னர் சென்னை மெரினா கடற்கரைக்கு நீலக்கொடி சான்றிதழ் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



இந்நிலையில், நீலக்கொடி திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, மெரினா லூப் சாலையில் பொதுமக்கள், மீனவர்கள் மறியலில் ஈடுபட்டனர். இது குறித்து, மயிலை நொச்சிக்குப்பம் மீனவர் கிராம சபையின் முன்னாள் துணைத் தலைவர் கு.பாரதி கூறுகையில்,

"மெரினா கடற்கரையில் கலங்கரை விளக்கம் முதல் நொச்சிக்குப்பம் வரை நீலக்கொடி திட்டத்தை செயல்படுத்த சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இப்பகுதியில் 3 இடங்களில் மட்டுமே கடற்கரைக்கு செல்வதற்கு வழி அமைக்கப்படும். இதனால், பாரம்பரியமாக அங்கு மீன்பிடி தொழில் செய்து வரும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்.

மேலும், இத்திட்டம் செயல்பாட்டு வந்தால், கடற்கரைக்கு செல்லும் பொதுமக்கள் நுழைவுக் கட்டணம் செலுத்தும் நிலை ஏற்படும். கலங்கரை விளக்கம்-நொச்சிக்குப்பம் வரையிலான பகுதியை மீன்பிடி தொழில் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்க வேண்டும் என மீனவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால், இதற்கு எதிர்மாறாக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும், மெரினா லூப் சாலையில் பெண்கள் ஏற்கெனவே மீன் வியாபாரம் செய்த இடத்தில் அவர்களை வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டும். "- என்றார்.





# துருக்கி வெடிவிபத்தில் 12 பேர் உயிரிழப்பு

## 6 பேர் படுகாயம்

துருக்கியில் நேற்று ஏற்பட்ட வெடி விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். 6 பேர் படுகாயம் அடைந்தனர்.

துருக்கியின் மேற்கு பகுதியில் பாலிகேசிர் மாகாணத்தில் கரேசி நகர் அமைந்துள்ளது. அங்கு வெடி மருந்து உற்பத்தி ஆலை செயல்படு கிறது. அந்த ஆலையில் நேற்று பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. ஆலையில் பணியாற்றிய 12 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். 6 பேர் பலத்த தீக்காயம் அடைந்தனர்.

இதுகுறித்து துருக்கி பொலிஸ் அதிகாரிகள் கூறுகையில்,

“கரேசி நகரில் செயல்படும் இசட். எஸ்.ஆர். என்ற வெடிமருந்து உற்பத்தி ஆலையில் துப்பாக்கி குண்டுகள் தயாரிக்கப்படுகின்றன. இங்கு தயார் செய்யப்படும் துப்பாக்கி குண்டுகள் உலகம் முழுவதும் ஏற்றுமதி செய் யப்படுகிறது. எதிர்பாராத விதமாக இசட்.எஸ்.ஆர். ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டிருக்கிறது. இதற்கான காரணம் உடனடியாக தெரியவில்லை.

துருக்கியின் பல்வேறு நகரங்களில் குர்து தீவிரவாத குழுக்கள் செயல் படுகின்றன. கரேசி நகர் வெடி விபத்தில் தீவிரவாதிகளுக்கு தொடர் பில்லை என்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. மனித தவறு காரணமாக வெடிவிபத்து நேரிட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம்.” - என்றனர்.

நேரில் பார்த்த சாட்சிகள் கூறும் போது,

“வெடிவிபத்து நேரிட்ட ஆலைப் பகுதி போர்க்களமாக காட்சியளிக் கிறது. ஆலையின் கட்டடங்கள் மிகக் கடுமையாக சேதமடைந்துள்ளன. ஆங் காங்கே பொருள்கள் சிதறிக் கிடக்கின் றன. வெடி விபத்து ஏற்பட்ட பகுதியை செய்தியாளர்கள் பார்வையிட அனுமதி வழங்கப்பட வில்லை.” என்றனர்.

# இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவின் நிச்சயம் கைது செய்யப்படுவார்

## போலந்து அதிரடி உத்தரவு





இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு போலந்து செல்ல உள்ள நிலையில், அவர் போலந்து வந்தால் நிச்சயம் கைது செய்யப்படுவார் என்று அந் நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

பலஸ்தீனத்தில் ஆயிரக்கணக்கான உயிர்களை இஸ்ரேல் இராணுவம் கொன்று குவித்திருக்கிறது.

இது தொடர்பான வழக்கில் சர்வ தேச நீதிமன்றம் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கு பிடியானை பிறப் பித்திருக்கும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக் கும் தொடர்ந்து மோதல் போக்கு இருந்து வந்ததுடன், இது கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் உச்சத்தை எட்டியது.

சுதந்திர பலஸ்தீனத்திற்காகவும், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்தும் ஹமாஸ் தாக்குதலை நடத்தியிருந் தது. இதில் 100 பேர் வரை கொல்லப்பட் டனர் என இஸ்ரேல் கூறியிருந்த போதும் அதற்கான ஆதாரங்கள் எது வும் பொதுவெளியில் பகிரப்படவில்லை.

இருப்பினும், இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கிறோம் என்று இஸ் ரேல் பலஸ்தீனம் மீது போரை தொடுத்தது. அமெரிக்க இராணுவத் தின் உதவியுடன் இஸ்ரேல் போரில் தொடர்ந்து முன்னேறிக்கொண்டே இருந்தது.

இறுதியாக சில நாள்களுக்கு முன்னர் ஹமாஸ் தலைவரைகளை யும் இஸ்ரேல் இராணுவம் படு கொலை செய்தது. போர் காரணமாக பலஸ்தீனத்தில் இராணுவ வீரர்கள் தவிர, 45,259 பொதுமக்கள் உயிரிழந் துள்ளனர்.

இந்நிலையில் நெதன்யாகுவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு பல நாள்களாக விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த மாதம் தீர்ப்பளிக்கப்பட்டது. தீர்ப்பின்படி நெதன்யாகு போர் குற்ற வாளியாக அறிவிக்கப்பட்டார்.

அவரை கைது செய்ய உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் சர்வதேச நீதிமன்றத்தில் உறுப்பின ராக உள்ள நாடுகளில்தான் இந்த கைதுநடவடிக்கைமேற்கொள்ளப்படும்.

இஸ்ரேல் இதில் உறுப்பினர் கிடை யாது. அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் கூட உறுப்பினர்களாக இல்லை. எனவே, இந்த நாடுகளுக்கு நெதன்யாகு போகும் போது அவர் கைது செய்யப்பட மாட்டார்.

இதே சர்வதேச நீதிமன்றத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளுக்கு சென் றால் கைதாக வாய்ப்புக்கள் அதிக மாக உள்ளது. அடுத்த சில நாள்களில் நெதன்யாகு போலந்து செல்ல இருக்கிறார்.

அங்கு ஆஷ்விட்ஸ் விடுதலையைக் குறிக்கும் முக்கிய நிகழ்வில் அவர் பங்கேற்கவுள்ளார் என சொல்லப்பட் டது. போலந்து சர்வதேச நீதிமன்றத் தின் விதிகளை ஏற்றுக்கொண்டிருக் கிறது.

அங்கு சென்றால் நெதன்யாகு கைதாகலாம் என்று பேசப்பட்டது. இதனை உறுதி செய்யும் விதமாக, போலந்து நாட்டின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர், நெதன்யாகு எங்கள் நாட்டுக்குள் நுழைந்தால் கண்டிப்பாக கைது செய்யப்படுவார் என்று கூறியிருக்கிறார்.

பக்கங்கள் 03

கனடா முரசு

புதன்கிழமை 25/12/2024

## 60 ஆண்டுகளாக பரிமாறப்படும் நத்தார் தின வாழ்த்து அட்டை

கனடாவில் சுமார் 60 ஆண்டுகளாக மூன்று நண்பர்களுக்கு இடையில் நத்தார் வாழ்த்து அட்டைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டு வருகின்றது.

1964ஆம் ஆண்டு 02▶



# இந்த ஆண்டின் சிறப்பு நேரம் இது; கனடிய பிரதமர் நத்தார் வாழ்த்து

“இந்த ஆண்டின் சிறப்பு நேரம் இது. அன்பானவர்களுடன் கூடி, விடுமுறைக் காலத்தைக் கொண்டாடுவதற்கும், உலகில் உள்ள அனைத்து நன்மைகளுக்கும் நன்றி செலுத்துவதற்கும் ஒரு நேரம்.”

- இவ்வாறு கனடிய பிரதமர் ட்ரூடோ தனது நத்தார் வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த செய்தியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, இது இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவதற்கும், அவருடைய கருணை, மன்னிப்பு மற்றும் விசுவாசத்தின் கதையைப் பற்றி சிந்திக்கவும் ஒரு நேரம். அவருடைய வாழ்க்கையின் படிப்பினைகள் உலகளாவியவை, மேலும் அவை ஒவ்வொரு முறையும் மக்களுக்கு ஊக்கமளித்து ஆறுதலளிக்கின்றன. உங்களைப் பொறுத்தவரை, விடுமுறை நாள்கள் பெரிய குடும்பக் கூட்டங்கள் மற்றும் விருந்துகள், பரிசுகள் மற்றும் கொண்டாட்டங்களின் நேரமாக இருக்கலாம்.

சிலவேளைகளில், இது மிகவும் கடினமான நேரமாக இருக்கலாம். நீங்கள் துக்கமாகவோ, கவலையாகவோ அல்லது தனியாகவோ இருந்தால், இது ஆண்டின் கடினமான நேரமாக இருக்கலாம். 02▶

# குடிவரவு கொள்கையில் மாற்றம் தேவை; கனடா குடிவரவு அமைச்சர் தெரிவிப்பு

கனடாவின் குடிவரவு கொள்கையில் மாற்றம் தேவை என அந்நாட்டின் குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

குடிவரவு முறைமை மாற்றி அமைக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

பெரும் எண்ணிக்கையிலானவர்கள் புதிதாக நாட்டுக்குள் பிரவேசித்துள்ளனர் எனவும் இதனால் பல தசாப்தங்களாக காணப்பட்ட குடியேறிகளுக்கான நலன்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



சில நடைமுறைகளில் மாற்றம் செய்வதன் மூலம் பழைய நிலைக்கு கொண்டு வர முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் குடியேறிகள் சனத்தொகை மூன்று வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாகவும் இது கடந்த தசாப்தத்தை விடவும் இரண்டு மடங்கு அதிகமாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வலுவான ஊழியப்படையொன்றை உருவாக்க குடியேறிகளின் வருகை அவசியமானது என அமைச்சர் மில்லர் தெரிவித்துள்ளார்.

எனினும், தற்போதைய நடைமுறைகளில் மாற்றம் செய்ய வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# நத்தார் தாத்தாவாகி வாழ்த்து கூறினார் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட்



கனடாவின் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் நத்தார் தாத்தா போல் வேடமிட்டு நத்தார் செய்தியை வெளியிட்டுள்ளார்.

முதல்வர் டக் போர்ட் சமூக ஊடகங்களின் வாயிலாக காணொலி ஒன்றின் மூலம் நத்தார் வாழ்த்து செய்தியை வெளியிட்டுள்ளார்.

ஒன்றாரியோ மக்களுக்கும் அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பிலும் இந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டு அவர் காணொலி வெளியிடப்பட்டுள்ளார்.

தமது அரசாங்கம் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக் காக நன்றி பாராட்டுவதாக டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

## இந்த ஆண்டின்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தனிமையாக இருக்கலாம், எனவே இந்த ஆண்டு எளிதான நேரத்தை அனுபவிக்காதவர்கள் மற்றும் நமக்குத் தெரிந்தவர்களை விட அதிகமாகத் தேவைப்படுபவர்களை நாம் அனைவரும் பார்க்கலாம்.

கடந்த ஆண்டைப் பற்றி சிந்தித்து எதிர்காலத்தைப் பார்க்கும்போது, நமக்கும் தேவைப்படுபவர்களுக்கும் அன்பையும் கருணையையும் தொடர்ந்து காட்டுவோம். கனடாவை நாடாக மாற்றுவதற்குத் தங்களைத் தாங்களே அதிகம் கொடுத்தவர்களுக்கு ஒரு கணம் நன்றி செலுத்துவோம்.

கனடாவை தாய் நாடு அல்லது வீடு என அழைப்பதற்கு எங்கள் கனேடிய ஆயுதப்படையின் துணிச்சலான உறுப்பினர்கள், அர்ப்பணிப்புள்ள முதல் பதிலளிப்பவர்கள் மற்றும் அத்தியாவசிய பணியாளர்கள் மற்றும் எண்ணற்ற தன்னார்வலர்களது பங்களிப்பினை நாங்கள் பெருமிதத்துடன் நினைவுகூருகின்றோம்.

இன்று கொண்டாடும் அனைவருக்கும் நான் மகிழ்ச்சியையும், துன்பப்படுபவர்களுக்கு ஆறுதலையும் விரும்புகிறேன். நீங்கள் எங்கிருந்தாலும், நீங்கள் ஒளியையும், வரவிருக்கும் ஆண்டிற்கான நம்பிக்கையையும் பெறுவீர்கள் என்று நம்புகிறேன். கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்." - என்று குறிப்பிட்டுள்ளார்.





## 60 ஆண்டுகளாக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் இந்த கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை பரிமாற்றம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கரோல் மற்றும் பொப் காடாஷ் ஆகிய இருவரும் ரிச்சர்ட் சோபார்ட் என்ற நண்பருடன் இவ்வாறு கிறிஸ்மஸ் அட்டை பரிமாறிக் கொண்டு வருகின்றனர்.

முதல் ஆண்டில் இந்த நண்பர்களுக்கு இடையில் பரிமாறிக்கொள்ளப்பட்ட வாழ்த்து அட்டைகளே மீண்டும் மீண்டும் பரிமாறிக்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த 60 ஆண்டு காலப்பகுதியில் வாழ்க்கையில் பல்வேறு பிரச்சனைகள் துன்பங்கள் ஏற்பட்ட போதிலும் இழப்புக்களை தாண்டி இந்த நண்பர்களுக்கு இடையில் வாழ்த்து அட்டைகள் பரிமாறக் கொள்ளப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

கரோல் மற்றும் பொப் ரெஜினாவைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் சோபர்ட் கல்கரியைச் சோந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# நத்தார் தாத்தாவின் பயணத்திற்கு அனுமதி வழங்கியது கனடா

கனடிய வான்பரப்பின் ஊடாக பயணம் செய்வதற்கு நத்தார் தாத்தா விற்கு அரசாங்கம் அனுமதி வழங்கி யுள்ளது. கனடிய போக்குவரத்து மற்றும் வர்த்தக அமைச்சர் அனிதா ஆனந்த் இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ளார்.

நத்தார் தாத்தா அல்லது சாண்டா வின் பயண ஆவணங்களை தாம் பரிசீலனை செய்ததாக அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சராக பதவி ஏற்றதன் பின்னர் முதல் தடவையாக அவர் சாண்டாவை சந்தித்துள்ளார்.

இந்த பண்டிகை காலத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

நத்தார் தாத்தா எங்கு பயணம் செய்கிறார் என்பதனை கனடிய பாதுகாப்பு அமைச்சின் இணைய தளத்தின் ஊடாக அறிந்து கொள்ள முடியும் என ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்கள் மற்றும் சிறுமியர் நத்தார்த் தாத்தாவை எதிர்பார்த்து காத்திருப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



